# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.

## அசல் வழக்கு எண். 98/2024

பெயர் : தங்கவேல் நாள் : 29.01.2025

பி.வா.சா.1 : **பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாதி என்னுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திய தேதியும், எனக்கு பொது அதிகாரம் வழங்கிய தேதியும் ஒரே தேதி தான் என்றால் ஒரே தேதி தான். மேற்படி 2 பத்திரங்கள் எழுதும்போதும் வாதி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்தார் என்றால் சரிதான். வாதியின் கணவரும் அவருடன் இருந்தார் என்றால் சரிதான். வாதியின் கணவர் தெய்வசிகாமணியிடம் சாட்சி கையொப்பம் எதுவும் மேற்படி பத்திரங்களில் பெறப்படவில்லை என்றால் சரிதான். பொது அதிகாரம் முகவர் எனது பைனான்ஸ் பார்ட்னர் என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணத்தை வாதி தனது கணவருக்கே எழுதிக்கொடுப்பதாக என்னிடம் சொன்னார் என்றால் சரியல்ல. கணபதி என்பவரது பெயரில் எழுதிவைக்கப்பட்டிருந்த பொது அதிகார ஆவணத்தில் வாதி கையெழுத்திட மறுத்தார் என்றாலும், அதில் கையெழுத்து செய்தால் தான் நான் கடன் கொடுப்பேன் என கூறினேன் என்றாலும் சரியல்ல.

2. வாதி கேட்டபடி அவரது கணவர் பெயரில் பொது அதிகாரம் ஏற்படுத்தி இருந்தால் என்னால் பின்னிட்டு கிரையப்பத்திரம் எழுதியிருக்க முடியாது என்றால் சரியல்ல. பின்னிட்டு 2ம் பிரதிவாதி கணபதி என்பவரை வைத்து மோசடியாக கிரயப்பத்திரம் தயார் செய்ய வேண்டி வாதியின் கணவர் பெயரில் பொது அதிகாரம் ஆவணம் எழுத நான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. கிரையபத்திரமும், பொது அதிகார ஆவணமும் என்னிடம் ரூ.50,000தொகை கடனாக பெறுவதற்காக தான் எழுதப்பட்டது என்றால் சரியல்ல, நிலத்தை கிரையம் செய்வதற்காக எழுதப்பட்டது. பொது அதிகாரம் மற்றும் கிரய ஒப்பந்தம் ஆகியவை ஒப்புக்காக எழுதப்பட்டது என்றால் சரியல்ல.

3. கிரையம் எழுதப்பட்டதாக கூறும் இடம் வாதியின் கணவரின் சொத்தினை ஒட்டி உள்ளது என்றால் வாதியின் 330 சதுரடிகள் போக மீதியுள்ள நான் கிரையம் பெற்றுள்ளேன். மொத்தம் எத்தனை சதுரடிகள் வாங்கினேன் என்றால 1595 சதுரடிகள் வாங்கினேன். பட்டா எத்தனை சதுரடிக்கு வாங்கினேன் என்றால 1595 சதுரடிகளுக்கு வாங்கினேன். மேற்படி பட்டா படி வாதிக்கு இன்னும் இடம் உள்ளது என்றால் 1595 சதுரடிகள் போக மீதம் வாதிக்கு உள்ளது. அது பொது பட்டாவாக உள்ளது. வாதி சிவகாமியின் பெயரை நீக்கி பட்டா வாங்கியுள்ளேன் என்றால் நான் நீக்கவில்லை.

பட்டா யார் வாங்கினார்கள் என்றால் நான் தான் வாங்கினேன். 1595 சதுரடிகள் வாங்கியதாக நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. வாதிக்கு பாத்தியப்பட்ட 330சதுரடிகளையும் சேர்த்து நான் பட்டா வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் செய்த கிரையமும் மோசடியானது என்றாலும், பட்டாவும் மோசடியானது என்றால் சரியல்ல.

4. எனக்கு கிரய ஒப்பந்தம் மற்றும் கிரைய பத்திரம் எழுதிய தேதியில் எனக்கு சுவாதீனம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரத்தை வைத்து கிரையம் செய்த சமயத்தில் வாதிக்கு வாய்மொழியாகவோ, எழுத்துமூலமாக தகவல் கொடுக்கவில்லை என்றால் வாய்மொழியாக தகவல் கொடுக்கப்பட்டது. பொது அதிகார முகவரோ, பிரதிவாதியோ பொது அதிகார பத்திரத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் நான் கையெழுத்து செய்யவில்லை, கணபதி கையெழுத்து செய்துள்ளார். பொது அதிகார முகவர் பத்திரத்தை நான் மோசடியாக தயார் செய்துள்ளதால் அந்த பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. வாதியும், அவரது கணவரும் 22.01.2021 வரை எனக்கு வட்டி செலுத்திவந்தார்கள் என்றால் சரியல்ல.

5. அசலை நான் இடையில் கேட்கவில்லை என்றால் சரியல்ல. 01.02.2021ல் வாங்கிய கடனை திரும்ப செலுத்துவதாக என்னிடம் வாதி கூறினார் என்றால் சரியல்ல. ஆனால் நான் 17.09.2002ல் பொது அதிகார முகவரை வைத்து கிரையப்பத்திரம் ஏற்படுத்தியதாக கூறினேன் என்றால் சரியல்ல. நானும், வாதியின் கணவரும் நடைபயிற்சி செல்லும் போது சந்தித்துக்கொள்வோம் என்றால் சரியல்ல. கடைவீதியில் சந்தித்து கொள்வோம். இருவரும் பரஸ்பரம் வணக்கம் சொல்லி மரியாதை செய்து கொள்வோம் என்றால் சரியல்ல. 17.09.2002ல் கிரையம் செய்து கொண்ட விபரத்தை நான் கூறவில்லை என்றால் சரியல்ல. வாதிக்கு கொடுத்த ரூ.50,000கடனுக்காக மோசடியாக கிரையம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி சொத்தின் தற்போது ரூ.20லட்சம் இருக்கும் என்றால் அதுபற்றி தெரியவில்லை.

6. விலைமதிப்பு அதிகம் உள்ள நிலத்தை ரூ.44,500க்கு கிரையம் செய்ய நினைக்கவில்லை என்றாலும், விருப்பப்படவில்லை என்றாலும் சரியல்ல, அந்த சமயத்தில் அவ்வளவு தான் மதிப்பு இருந்தது. வாதிக்கும், அவரது கணவருக்கும் மேற்படி சொத்தை விற்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றாலும், அந்த எண்ணம் அவர்களுக்கு இல்லை என்றாலும் சரியல்ல. நான் வாங்கிய இடத்தில் கறிவேப்பிலை மரம், வாழை, முருங்கை மரங்கள், துளசிமாடம் ஆகியவைகள் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்தினை ஆணையரை வைத்து ஆய்வு செய்ய எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் அவசியம் இல்லை. மேற்படி இடத்தில் உள்ள மரங்களுக்கு வாதியின் கணவரது இடத்தில் போர்வெல்லில் இருந்து தண்ணீர் செல்கிறது என்றால் சரியல்ல.வாதியின் கணவர் வீடும், மேற்படி சொத்தும் ஒரே காம்பவுன்டுக்குள் உள்ளது என்றால் சரிதான், வேலி நான் போட்டேன், சுவரை

அவர்கள் வைத்துள்ளார்கள். மேற்படி காம்பவுன்டுக்குள் செல்ல ஒரே கேட் தான் உள்ளது என்றால் சரிதான்.

7. எனது இடத்தினை அளந்து அத்துக்கல் உள்ளதா என்றால் அளந்து அத்துக்கல் நட்டேன், தற்போது அத்துக்கல் இல்லை. தாவா சொத்தின் சுவாதீனம் என்னிடம் கொடுக்கப்படவில்லை என்றாலும், நான் எடுத்து கொள்ளவில்லை என்றாலும், தற்போது வரை வாதியின் சுவாதீனத்தில் தான் மேற்படி சொத்து உள்ளது என்றால் சரியல்ல. பொது அதிகாரப்பத்திரமும் மோசடியானது என்றாலும், வாதி தனது கணவர் அருகில் இருக்கும் போது 3ம் நபருக்கு எழுதிக்கொடுக்கமாட்டார் என்றாலும் சரியல்ல. ரூ.50,000கடனாக கொடுத்தற்காக சொத்திற்கு ஆசைப்பட்டு மோசடியாக கிரையம் எழுதிக்கொண்டேன் என்றால்சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்/- சாட்சி தங்கவேல்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
எழுமாத்தூர், மொடக்குறிச்சி வட்டம்.